கூறி நாஸ்திகனை மறுத்தனரன்றே? மனிதனும் கழுதையும் பின்னப்பொருளானமையின் இவ்வுபமானம் பொருந்தும். அவ்வாறு ஜீவான்மாவான பசுவும், பாசமும் பின்னப்பொருளன்றே. இவர் மதப்படி ஒவ்வொரு ஜீவாத்துமாவும் தனித்தனிப் பரிபூரணசத்துப்பொருள்; பாசமும் பரிபூரணப்பொருள். ஒரு ஆன்ம பரிபூரணப்பொருளில் மற்றொரு ஆன்ம பரிபூரணப் பொருளே யிருப்பதசங்கதமாக அனேககோடி ஆன்மபரிபூரணப்பொருள் ஒருஇடத்தில் இருக்குமென்பதும் அதேயிடத்தில் பரிபூரண கடவுளிருக்குமென்பதும் அதேயிடத்தில் பரிபூரணபாசப்பொருளிருக்குமென்பதும் எப்படிப்பொருந்துமெனக்கேட்டு, அத்துடனே தனித்தனிப்பரிபூரண ஆன்ம பாசவுபமேயத்துக்குத்தனித்தனி அபரிபூரணகண்ட ஏகதேச மனித கழுதையுபமானமெங்ஙனம் பொருந்துமென நாஸ்திகன் கேட்பானேயாயின் அவனுக்குப்பதில் சொல்ல வழியேது? ஆந்தைபோல் விழிக்கவேண்டியதுதானே. அப்போது அபயம் அபயமென அத்துவிதிகளுடைய திருவடிகளில் சரணுகதி சரணுகதியென வந்து விழுந்து; அவர்கள் சொல்லும் யுக்தியை அதாவது கடவுளொருவரே பரிபூரணசத்துப்பொருள்! மற்றப் பசுபாப்பொருள்கள் சத்துப்போலிப்பொருள்களென்று சொல்லும் யுக்தியைக்கேட்டுக்கொண்டுபோய்த் தானேசமாதானஞ்சொல்லவேண்டும். இங்ஙனமாக, தமக்குச்சகாயஞ்செய்யும்பரமோபகாரிகளான அத்துவிதிகளைத் தூஷித்தல் நியாயமாமோ? நன்றிமறத்தலன்றே?

இன்னும் வரும்.

ஓர் இந்து.

விளம்பரம்.

ப்ரம்மவித்தியா அச்சியந்திரசாலையில் பதிப்பித்த ஒவ்வொரு புத்தகமும் அடியிற்கண்ட நமது ஏஜண்டவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

1. D. H. சுப்பிரமணிய ஐயர் அவர்கள்
புஸ்தகவியாபாரம்
கமிஷன் ஏஜண்டு
பத்தமடை
சேரன்மாதேவி போஸ்டு.

2. K. N. ஈசுவரய்யாவர்கள்,
"வித்தியாபானுயந்திரசாலை"யின் அதிபர்,
கோயமுத்தூர்.

ப்ரம்மவித்தியா பத்திராதிபர் ப்ரம்மஸ்ரீ கு. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களால் அடியிற்கண்ட புஸ்தகங்கள் பாஷியஞ்செய்யப்பட்டுவிற்பனைக்குத்தயாராகவிருக்கிறது. வேண்டுபவர்கள் விரைவில் பெற்றுக்கொள்ளவேண்டும்.

புருஷசூக்தம் விலை		0—4—0
கைவல்யம்	,,	0—4—0
ஜாபாலம்	,,	0—2—0

இம்மூன்றும் சேர்ந்துவாங்குபவர்கட்கு ஜாபாலம் இனாமாகக்கொடுக்கப்படும்.

ரா. நாராயணசாமி ஐயர்,
மானேஜர்.

ஸ்ரீமத் கைவல்யபாஷ்யம்.

இஃது ஸ்ரீஜகதாசாரிய ஸ்ரீமத் சங்கராசாரியஸ்வாமிகள் ஸ்ரீ ஸ்ரீகண்டர், ஸ்ரீபவதேவர், ஸ்ரீஹரதத்தாசாரியர், ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதேந்திரர் முதலிய மகான்களால் சுவாநுபவமாகக் கொண்டாடப்பட்ட மார்க்கங்களையனுசரித்து ஸ்ரீபரமசிவன் பாதத்தில் இடைவிடாது பக்தி பூண்டொழுகும் முமுக்ஷுக்களின் பரமோபகாரத்தின் பொருட்டு, ப்ரம்மஸ்ரீ ப்ரம்மவித்தியாபத்திராதிபர் கு. ஸ்ரீநிவாச சாஸ்திரிகளவர்களால் "கைவல்யோபநிஷத்பாஷ்யம்" செய்யப்பட்டு விற்பனைக்குத்தயாராகவிருக்கிறது. இதன் விலை அணு ௪. தபாற்கூலி பிரத்தியேகம்.

வேண்டுபவர்கள் ப்ரம்மவித்தியா பிரஸ் மானேஜருக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

10இ 2ம், 25இ 3ம், 50இ 6ம், 100இ 15ம், கமிஷன் கொடுக்கப்படும்.

R. நாராயணசாமி ஐயர்,
மானேஜர்,
ப்ரம்மவித்தியாபிரஸ், சிதம்பரம்.

ப்ரம்மவித்தியா.

இப்பெயருடைய ஸமஸ்கிருதம் தமிழ் இரண்டு பாஷைகளிலும் எளிய நடையில் வேதம் முதலிய அரிய ஆரியநூல்களின் உண்மைப்பொருள்களையும் நாஸ்திகம் கிறிஸ்தவம் முதலியப் புரமதக் குறைகளையும் ஆரியாசாரப்பெருமையையும் மற்றுமுள்ள வைதிகவிஷயங்களையும் ஆரியதிராவிடாபிமானிகளாகியமகாபுருஷர்களுக்கு எடுத்து அவ்வப்பொழுது வெளியிட்டுவரும் பத்திரிகை ஒன்று மாதம் இருமுறை ஸ்ரீ சிதம்பர மகாக்ஷேத்திரத்தினின்று ஏழு வருஷகாலமாய் ப்ரம்மஸ்ரீ பரசமய பஞ்சானன பண்டித பாஞ்சஜன்ய கு. ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் அவர்களால் நடாத்தப்பட்டுவருகிறதென்பது அனேகமாய்த் தென்னாட்டாரியர் எவரும் அறிந்திருக்கலாம். இதன் உருவம் டிம்மி [5] பாரம் கொண்டது; 20 பக்கங்கள் பெற்றது; இது பூர்ணிமை, அமாவாஸை இவ்விருதினங்களில் வெளிப்படும்.

ப்ரம்மவித்தியாவின் கையொப்ப விவரம்.

இந்தியாவிற்கு	வருஷம்	1-இ	3—0—0.
ஷை	மாசம்	6-இ	1—8—0
ஷை	மாசம்	3-இ	0 14—0
ஷை	1-காபி		0—3—0
இலங்கைக்கு	வருஷம்	1-இ	3—8—0

உபாத்தியாயர் அனுமதியின்பேரில் எழுதிக்கொள்ளும் மாணாக்கர்களுக்கும்; தர்மபாடசாலை உபாத்தியாயர்களுக்கும், சென்னை இ-டி. சொசைட்டி சார்டர்பெற்ற பிரசங்கிகளுக்கும், கிராமத்தில்பதின்மர் கையொப்பமிட்ட விண்ணப்பத்தின்பேரில் படித்துப்போதிக்கும் வித்துவான்களுக்கும் ஸூ1-இ1—8—0க்குக்கொடுக்கப்படும்.

Chidambaram:—Printed and published for the proprietor at the "Brahmavidya" press No. 43. Senkalluneerpilliarkoil street

ப்ரஹ்மவித்யா.

பத்திரகிரயம்.			
1-ஸூ	2	12	0
6-மீ	1	8	0
3-மீ	0	14	0
1-காபி	0	2	6
இலங்கைக்கு	3	8	0

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

BRAHMAVIDYA PATHRIKA.

பத்திர கிரயத்தை. மணியார்டராகவாவதல்லது! ரூபா 1-க்கு அணு 1-சேர்த்துத் தபால்லேபிலாகவாவது சிதம்பரம்ப்ரம்மவித்தியா ப்ரொஸ் மானேஜருக்கு அனுப்பவேண்டும்

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

ஸத்யம்வத ॥ ... ॥ ஸ்வாத்யாயாத் ... ॥

௪-ம்புத்தகம்] சிதம்பரம்:— ௧௮௯௯ஸ பிப்ரவரி மீ ௨௫ [இலக்கம்-௰௨

பத்ரிகாவிஷய:

௧- யேதாவத்வேதஸ்யைவ ஸநீயாம்ஸம் பத்ரிகாந்த ஐஸ்வர்ய ஹீயஸாம் ப்ரேஷயிகவா ... ப்ரேஷணாம் ... காய நிவேதா ...

௨- தத்யஸ்ஸாய பத்ரிகாத யாவி ப்ரேஷ்யா:.

௩- ஸ்யா: பத்ரிகாஸ்ஸஹத்ர பத்ரிகாயா நிவேஸ யிதம் ப்ரேஷ்யதே. தாஸ்வங்காம் காகவே ஸத: ஸப்டபாட்யா விவேச்யா: யத்ரவேலா ... ஷணம் நதாவாரிஹாவகா:-

௪- ஸ்யே பத்ரிகாக்ராஹகா: தேஷாம் நாம ஸாமாதி ஸம்ப்ரதிஸ்ஸயத, யதி வ: ஸ்வாஜ்ஞாயா ந: தஸ்ய விஜ்ஞாபநீயம்.

௫- ஸ்யபத்ரிகா விஷய: ஜிஜ்ஞாஸ்யதே தஹி ஸம்ப்ரேஷ்யா ... ப்ராஷாவதி நீ வீழி யாஸஜ்ஞா நதே.

௬- ஸ்யதி ப்ரேஷிதா: கேநாபிகாரணேந நப்ரகாசிதாஸ்ததே ந ப்ரத்யாபேஷ்யந்து.

௭- ஸ்யதி நப்ராஸ்தாஸ் பதநம் நப்ரேஷ்யதே பத்ரிகா.

இதி-

ரா நாராயணாய்ய:
நிவேதகா
விசாபர:

பத்திரிகாவிதானங்கள்.

௧. பத்திரிகை வேண்டுவோர் பரம்மவித்தியா ப்ரொஸ் மானேஜருக்கு முன்பணமாகவேயனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

௨. கடிதமுதலியவைகளும் மேற்படிமானேஜருக்கே அனுப்புதல்வேண்டும்.

௩. பத்திரிகையிற் பிரசுரிக்கும்பொருட்டு அனுப்பப்படும் கடிதங்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில் நல்லமைகொண்டு சுத்தரூபமாகவும், பொதுவிருத்திக்கேற்றதாகவும் எழுதப்படல்வேண்டும். தூஷணமடங்கிய கடிதங்கள் இடம்பெறு.

௪. கையொப்பக்காரர்கள் ஊர்பெயர்முதலியவற்றை நன்றாக எழுதியனுப்புதல்வேண்டும். வேறு ஊர்களுக்குப் போககேரிடின் அவ்விலாசத்தை அறிவித்தல்வேண்டும்

௫. இன்னும் இதைப்பற்றிவிவரம் அறியவேண்டுவோர் அரையணு லேபிலாவது ரிப்பிளை கார்டாவது அனுப்பித்தெரிந்துகொள்ளலாம்.

௬. அனுப்பப்பட்ட கடிதங்கள் எவ்வித அசௌகரியத்தினுலாவது பிரசுரிக்கப்படாவிடில் திரும்பவும் வாபசு செய்யப்படமாட்டா.

௭. முன்பணம் அனுப்பாதவர்களுக்கு இனிப் பத்திரிகை யனுப்பப்படமாட்டாது.

ரா. நாராயணசாமி ஐயர்,
மானேஜர்,
ப்ரம்மவித்தியா ப்ரொஸ்,
சிதம்பரம்.

உ

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌸𑍂𑌤𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌪𑍍𑌰𑌕𑌟𑌨𑌂.

[illegible]

[illegible]

𑌇𑌤𑌿 𑌕𑍁. 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍀.

[illegible]

𑌚𑌿𑌦𑌂𑌬𑌰𑌂

சூதசம்ஹிதா பிரகடனம்.

ஸ்காந்த மகாபுராணத்துள்ள ஆறுசம்ஹிதைகளுள் ஒன்றாய் யாவற்றினும் சிறந்ததாய்ச் சுத்தாத்வைத சித்தாந்த நெறியினை நன்கு தெளித்துணர்த்திச் சைவசமயத்துண்மை புகட்டுவதாயுள்ளது இச்சூதசம்ஹிதையென்பது அறிஞர்கள் யாவரும் அறிந்த விஷயமாம். நம் சைவசமயத்துள்ள எவ்விஷயங்களை அறியவிரும்பினும் இச்சூதசம்ஹிதைவாயிலாக அறியலாம். சிவபெருமானது மகிமையை இந்நூல் பெரிதெடுத்துவிளக்கும். இந்நூலினைப் பலகால் நன்கு படித்துணர்ந்தே ஸ்ரீசங்கரபகவத்பாதாசாரியசுவாமிகள் பேன்மைதாங்கிய மஹாபாஷ்யம் வகுத்தார்களென்னின், மற்றிதன்பெருமை எளிதில் பேசக்கிடப்பதாமோ. இந்நூலிற்கு விரிந்ததோருரையும் ஸ்ரீ வித்தியாரண்ணியசுவாமிகளால் இயற்றப்பட்டிருக்கிறது.

இது சைவசமயாபிமானிகளாகிய நம் தென்னாட்டவர்க்கு மிக உபயோகந்தரத்தக்கதாயிருந்தும் இதுவரையில் இந்நாட்டு வழங்கும் கிரந்த எழுத்தில் அச்சிடப்படவில்லை. பெங்களூரிலிருந்து தெலுங்கு எழுத்தில் அச்சிடப்பட்டுப் புஸ்தகம் ஒன்று-ரூபா 5-க்கு விற்கப்பட்டு வருகின்றது. அது தெலுங்கு எழுத்திலிருப்பதால் தெலுங்கு தெரிந்தவர்க்கேயன்றி மற்றையோர்க்கு நம் தென்னாட்டிற் பயன்தராதாதலால், பல அபிமானிகள் வேண்டுகோளின்படி நாம் அதனைக் கிரந்த எழுத்தில் யாவர்க்கும் உபயோகமாம் பொருட்டு அச்சிட்டு வருகின்றோம். நாம் முன் கையொப்பக்காரர்களுக்குக் குறித்த காலம் கழிந்துவிட்டமையால் இனி முன்பணமனுப்ப விருப்பமுள்ளவர்கள் ரூபா 3—0—0. அனுப்புதல்வேண்டும்.

இப்புத்தகம் பெற்றுக்கொள்ள விரும்புவோர்கையொப்பக்காரர்களாகச்சேர்ந்து இதன் கிரயமாகிய ரூபா மூன்றையும் முன்பணமாக அனுப்புதல்வேண்டும். அப்படி முன்பணம் அனுப்புவோர்க்கு மாசம்1-க்கு 8-பாரங்கொண்ட சஞ்சிகையாக 16-மீ வரையிலாவது அல்லது 16 மாசத்தின் பின்னர் உயர்ந்த கலிக்கோ பயிண்டு செய்து ஓரே தடவையில் புத்தகமாக்கியாவது அனுப்பப்படும். 10-க்கு 1-ம், 25-க்கு 3-ம, 50-க்கு 7-ம், 100-க்கு 15-ம் இனமாகக்கொடுக்கப்படும்.

பணம் அனுப்புவோர் இதனடியிற்கண்ட விலாசப்படி அனுப்பி ரசீது பெற்றுக்கொள்வதோடு, தமக்கு மாசந்தோறும் சஞ்சிகையாக வேண்டுமாயினும், அல்லது பயிண்டு செய்த புஸ்தகமாகவே பெற்றுக்கொள்ள விரும்பினும் தங்கருத்தைக் கடிதமூலமாகத் தெரிவித்தலும்வேண்டும். ஓரே முறையில் நூறு புஸ்தகங்கள் வாங்குவோர்க்குவிலை மேற்கண்டதற்கும் குறைந்த ரூபா இருநூறே.

இங்ஙனம்,

கு. ஸ்ரீநிவாசசாஸ்திரி.

ப்ரம்மவித்தியா ப்ரெஸ் தலைவர்,

சிதம்பரம்.

“ 𑌕𑌿𑌮𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌂 ”

[illegible]

[illegible]

ஓர் ஆச்சரியம்.

ப்ரம்மவித்தியா பத்திராதிபர் அவர்களுக்குப் பற்பல வந்தனமளித்து எழுதியது. ஐயா! சிறிதுகாலமாய் எனது சரீரம் ஆரோக்கியக் குறைவாயிருந்ததுபற்றி ஏதேனும் உபந்நியாசம் எழுதக்கூடாமற்போயிற்றேயன்றி வேறு எவ்வித உதாசீனத்தாலுமல்ல: இப்பொழுது நேரிற்கண்ட ஓர் அற்புதத்தை வெளியிடுகிறேன். அதைச் சிறிது தங்கள் பத்திரிகையின் ஓர் மூலையில் வெளியிடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஐயா! இத்தேசத்தில் ஸ்ரீமலையமலையெனப்படும் பொதிகையின் முடியிற்றோன்றிக்கண்டார் மனங்களிக்கக் கலக்கமற்றுப் பாய்ந்துவரும் “தாமிரபரணி” நதியை அறியாதார் யாவருமில்லை. அந்நதியின் வடகரையில் அம்பாசமுத்திரமென்னும் ஓர் பெரிய கிராமமுண்டு. அதன் சமீபத்தில் பார்ப்பாங்குடி என்னும் மற்றோர் சிறுகிராமமுண்டு. அவ்வக்கிரகாரத்தில் நேற்றிருபதாந் தேதியில் ஓர் மாடு ஓர் கன்றீன்றது. உடன் அக்கன்றைவிட்டு அந்தமாடு பறுமைமையைப்பற்றியது. அங்கு தோன்றிய கன்று எத்தன்மைத்தெனில், வேதத்தில் “நான்கு கொம்புகள்” என்று தொடங்கிய மந்திரத்திற்கண்ட விருஷபம்போலஇருதலைகள்பெற்று மூன்று செவிகள்உள்ளதாய்த் தோன்றியது. இதை யான் நேரிற்கண்டேன். அதன் கண்கள் நான்கு; மற்றைய உறுப்புகள் உலகத்திலுள்ள கன்றுகளுக்குள்ளதுபோலவே. இவ்விதம் உதிக்கக் காரணம் யாதென உண்மையை உற்றுநோக்கில் எமக்கு ஏதும் புலப்படவில்லை. இனி ஆத்திகராயுள்ளவர் இவ்விஷயத்திற் தற்காலம் மிகுந்த பாபத்தையன்றி வேறு காரணங்களை எடுத்தோதார். அதுகொண்டே “அதருமத்தால் மகா உற்பாதமுண்டாம்” என ஸ்ரீமத் இராமாயணம் ஓதுகிற்கின்றது. அந்தோ! இக்கலிகாலக் கொடுமையை நினைக்க எனது சரீரம் பதருகின்றது. ஆகமங்களில் உற்பாதங்கள் “திவ்வியம், பௌமம்” என இருவகையுள்ளதாய்ச் சொல்லப்பட்டது. அவற்றுள் ஆகாயத்திலுண்டாவது திவ்வியம். பூமியிற்றோன்றுவது பௌமம். பௌமங்களுள் “பிராணிகள் பிரசவித்த விகாரங்கள் ஒன்று” ஏற்பட்டிருக்கிறது. இவ்விததோஷங்கள் ஒழியவேண்டிஇக்காலம் செய்யும்சாந்தியாதெனில் தற்காலத்தியருதுசாந்தியே. அஃதே இவருக்குச் சுகங்கொடுக்கும். வர்ணங்களின் இயலை இலக்கணநூலாரே அறிவாரன்றி மற்றவர் அறியார். ஐயா! இக்காலத்தில்தருப்பைபவித்திரம்போல்கையில்இறகேந்தியும் மௌஞ்சிக்குப்பதிலாகத்தோல்வாரணிந்தும் வேதங்களுக்கெதிராக ஆங்கிலேய பாஷையைப் பயின்றும் வருகிறார்கள். கிரகஸ்தர்களோ! மந்யுவை (கோபத்தை வேள்வியை) சத்துருக்களிடமே செய்வார்கள். மற்றுக்

ப்ராப்தாவேவ புத்ரநாமா இத்யாதிஶ்ருதிம் ப்ரமா-
ணயந்த இவ தஸ்ய புத்ரகாமஸ்ய ஸம்ஸ்ம்ருதிபரா
பவந்தி ஹந்த! ப்ராஹ்மணா அபி கேவலம் லௌகிக
வாணிஜ்யாய வாடவேந ஸஞ்ஜாதாஸக்தயோ ம்லேச்ச-
பாஷாம் அப்யஸ்ய வேதஶாஸ்த்ரவிதோ விப்ராம்ஸ்த்ருணாய ம-
ந்யந்தே. ஹந்த! ஹிந்தவோ ப்ராஹ்மணாஸ்ச கேசி-
த்க்ருஸ்தவமதமேவ நிஜம் திவ்யமிதி வதந்த: ஸ-
ஹஸ்ரஶ: கேசிச்சூத்ராஸ்ஸந்த: ப்ரதிதினம் ஜ-
பா: பஞ்சாக்ஷரீம் ப்ரயாஸ: பஞ்சாஸ்யஹஜ்ஜேன
பரிஷ்க்ருததேஹா: இத்யாதீன்யதா அபஜாந-
தே ருத்ராக்ஷதாரிண: ஶிவாத்ஸாஹா: ஸர்வம் கலி-
மாஹாத்ம்யம். இத்யலம் விஸ்தரேண.

இலத்தூர ஸுந்தரராஜ:.

அத்ரிஸம்ஹிதா.

௯. ஏகமேவாக்ஷரம் யஸ்து குரு: ஶிஷ்யம் ப்ரபோதயேத் | ப்ருதிவ்யாம் நாஸ்தி தத்த்ரவ்யம் யத்தத்வா சாந்ருணீ பவேத் |

௰. ஏகாக்ஷரப்ரதாதாரம் யோ குரும் நாபிமன்யதே | ஶுனாம் யோனிஶதம் கத்வா சாண்டாலேஷ்வபிஜாயதே.

௰௩. ப்ராஹ்மணானாம் கர்மாணி 'யஜனம், தானம், அத்யயனம் வேதானாம், தபஸ்யா,' ப்ரதிக்ரஹ:, அத்யாபனம்'' இதி.

௨௨. அயே ப்ராஹ்மணா: ஸ்வதர்மாநனுஷ்டாய ஸ்வதர்மம் அநதீத்யாபி வேதான் கேவலம் பைக்ஷசரா ஜீவந்தி தான் ராஜா தண்டயேத் தஸ்கரான்னப்ரதோ ஹி ஸ: இதி ஸ்ம்ருதம்.

௩௩. ப்ராஹ்மணானாம் ஸாமான்யானி லக்ஷணானி. ஶௌசம், மங்கலம், அனாயாஸ:, அனஸூயா, அஸ்ப்ருஹா, தம:, தானம், தயா'' இத்யஷ்டௌ.

௩௪. அனஸூயா நாம—ந குணான் குணினோ ஹந்தி ஸ்தௌதி மந்தகுணானபி | நான்யதோஷேஷு ரமதே ஸானஸூயா ப்ரகீர்த்திதா.

௩௫. ஶௌசம் நாம—அபக்ஷ்யபரிஹாரஶ்ச ஸம்ஸர்கஶ்சாப்யநிந்திதை: | ஸ்வதர்மே ச வ்யவஸ்தானம் ...

கிரகங்களிற் செய்வதில்லை. இக்காலத்துத் துறவிகள் ஸ்ரீமந்நாராயணனைத் தொழுவதிலும் "தானே தன் புத்திரன்" என்னும்வேதப்பிரமாணத்தால்அவரதுஅருமைப் புதல்வனாகிய காமதேவனைத் தியானித்தலே பெரும்பான்மையில் தொழிலாகக்கொண்டார்கள். எல்லா நடவடிக்கைகளிலும் இங்கிலீஷ் பாஷையையே வழங்கத்தொடங்கி வேத சாஸ்திரங்களைக் கற்ற வித்துவான்களைச் சிறிதும் லக்ஷியஞ்செய்யாது சுயேச்சையாய்த் திரிந்துலாவி வருகின்றனர். இங்ஙனமிருக்கச் சிலர் கிறிஸ்தவர் மதத்தைக்கண்டு நமதுண்மை மதத்திற் சிறிதுங் கற்காது எல்லாமறிந்தவர்போல் மற்றவரை நிந்தித்துக் காலங்கழிக்கின்றனர். மற்றுஞ்சில கீழ்வருணத்தவர் ஏதோ காலையில் முழுகுவோம், கண்மணிமாலை தரிப்போம், கரைகண்டனைத் தொழுவோம், பழையது புசியோம், நேரிற்சுவர்க்கம் பெறுவோமெனவாதித்து முதல்வருணத்தவரைப் பழித்துவருகின்றனர். எல்லாங் கலியின் கொடுமையே. விரிக்கிற்பெருகும்.

மொழிபெயர்ப்பு. இங்ஙனம்,
இலத்தூர்ச் சுந்தரராஜசாஸ்திரிகள்.

அத்திரிஸம்ஹிதா.

9. ஒரு எழுத்தாவது கற்பித்த குருவுக்குச் சிடன் தீர்க்கவேண்டிய கடன் மிகப்பெரியது. எதைக்கொண்டு அந்தக்கடனைத் தீர்ப்போமெனினும் அதற்குத் தகுந்தது இவ்வுலகில் எதுவுமில்லை.

10. ஒரு எழுத்துக் கற்பித்தவரையுந் தனது குருவென்று மதித்துக் கௌரவிக்காதவன் நூறுதடவை நாய் ஜன்மமெடுத்துப் பிறகு சண்டாளனாகிறான்.

13. பிராமணர்களின் கடமைகளாவன:—யக்ஞயாகாதிகள் செய்தல், தானங்கொடுத்தல், வேதமோதல், தவஞ்செய்தல், தானம் பெறுதல், பிறருக்குப் போதித்தல்.

22. தங்களுக்கு நியமமான கடமைகளை நிறைவேற்றாமலும், வேதத்தைக் கற்காமலும், யாசகத்தினால் ஜீவனஞ்செய்யும் பிராமணர்களை அரசன் கொலைசெய்யவேண்டும். ஏனெனில், இதனால் திருடர்களுக்கு அன்னமிடுவதாகின்றது.

33. பிராமணனுக்குரிய லக்ஷணங்களாவன:—சௌசம் (பரிசுத்தம்,) மங்களம் (நன்னடக்கை,) அநாயாஸம் (மிதம்,) அனஸூயை (அஸூயையின்மை,) அஸ்பிருஹ (ஆசையின்மை,) தம (புலன்களையடக்கல்,) தானம் (ஈகை,) தயை (சலக பிராணிகளிடத்தும் அன்பு, இரக்கம்.)

34. அனஸூயையாவது:—நல்லவர்களின் நற்குணங்களை அவமதித்து இகழாதிருத்தல், பிறருடைய நற்குணங்களைப் புகழுதல், பிறருடைய தப்பிதங்களையுங் குற்றங்களையுங்கண்டு நகையாதிருத்தலேயாம்.

35. சௌசமாவது:—உண்ணத்தகாதவைப் புசியாதிருத்தல், நற்சகவாசம் (ஸத்ஸாங்கத்யம்,) தன்னெறி தவறாதிருத்தலேயாம்.

௩௬. மங்கலம் நாம—ப்ரஶஸ்தாசரணம் நித்யமப்ரஶஸ்தவிவர்ஜனம் | ஏதத்தி மங்கலம் ப்ரோக்தம் ருஷிபிஸ்தத்த்வதர்ஶிபி:.

௩௭. ஶரீரம் பீட்யதே யேன ஶுபேனாப்யஶுபேன வா | அத்யந்தம் தன்ன குர்வீத அனாயாஸ: ஸ உச்யதே.

௩௮. யதோத்பன்னேன ஸந்தோஷ: கர்த்தவ்யோ ஹ்யல்பவஸ்துனா | பரஸ்யாசிந்தயித்வார்த்தம் ஸாஸ்ப்ருஹா பரிகீர்த்திதா.

௩௯. பாஹ்யே சாத்யாத்மிகே சைவ து:கே சோத்பாதிதே க்வசித் | ந குப்யதி ந வா ஹந்தி தம: ஸ பரிகீர்த்தித:.

௪௦. அஹன்யஹனி தாதவ்யம் அதீனேனாந்தராத்மனா | ஸ்தோகாதபி ப்ரயத்னேன தானமித்யபிதீயதே.

௪௧. பரே வா பந்துவர்க்கே வா மித்ரே த்வேஷ்டரி வா ஸதா | ஆத்மவத் வர்த்திதவ்யம் ஹி தயைஷா பரிகீர்த்திதா.

௪௭. யமான் ஸேவேத ஸததம் ந நித்யம் நியமான் புத: | யமான் பதத்யகுர்வாணோ நியமான் கேவலான் பஜன்.

௪௮. ஆன்ருஶம்ஸ்யம் க்ஷமா ஸத்யம் அஹிம்ஸா தானமார்ஜவம் | ப்ரீதி: ப்ரஸாதோ மாதுர்யம் மார்தவம் ச யமா தஶ.

௪௯. நியமாஸ்து ஶௌசம் இஜ்யா தபோ தானம் ஸ்வாத்யாயோபஸ்தநிக்ரஹ: | வ்ரதமௌனோபவாஸம் ச ஸ்னானம் ச நியமா தஶ.

ஹந்த! நிர்கந்தகமலஸத்ருஶா நிர்குணா ப்ராஹ்மணா: ஶ்ருணுத அத்ரிமஹர்ஷேர்வசனானி. ஶ்ருத்வா ச மனஸி நிதத்த. ததோ மனோ விக்ருதம் ஸ்யாத். மதிர்விக்ருதா ஸ்யாத். ததோ லஜ்ஜா ஜாயேத. லஜ்ஜாவதாம் ரோஷ: ஸ்யாத். ரோஷோ நிஷ்ப்ரயோஜனோ ந ஸ்யாத். ததஶ்ச கார்யம் அன்விஷ்யேத. கார்யான்வேஷணாய குரு: அபேக்ஷ்யதே. குருசரணாஶ்ரயணேன ஶ்ரத்தா ஜாயதே. ஶ்ரத்தாபரிபாகேன பக்திருத்பத்யதே.

36. மங்களமாவது:—புகழத்தகுங் காரியங்களையே எப்பொழுதும் செய்தல், குற்றமான காரியங்களை ஒழித்தலுமாம்.

37. அநாயாஸமாவது:—நல்லதேயானாலும், கெட்டதேயானாலும், சரீரத்திற்குத் தொந்திரவுண்டாக்குமதிலும் மிதமிஞ்சாமை.

38. அஸ்பிருஹ:—தான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்ததைக்கொண்டு திருப்திபடைதல், எதையுந் தனக்கென்று துராசையால் கோராதிருத்தல், பிறர் மனைவியை யாசியாமை.

39. தம:—விரோதிகளிடத்தும் கோபமில்லாதிருத்தல். அபகாரத்திற்குப் பிரதியபகாரஞ்செய்யாதிருத்தல்.

40. தானம்:—தினந்தினமும் கொஞ்சங் கொஞ்சமானாலும் உல்லாசமான மனதுடனும் மிகுந்த கருணையுடனும் ஏழைகளுக்குப் பிச்சையிடுதல்.

41. தயை:—பந்துக்களையும், அறிமுகமில்லாத அன்னியரையும் தன்னைப்போலவே நடத்துவது.

47. யமம்:—எப்பொழுதும் அனுஷ்டிக்கத்தக்கது. நியமம் அவ்வளவு அவசியமில்லை. நியமகிருத்தியங்களையே பிரதானமாகக்கொண்டு யமானுஷ்டானத்தைக் கைவிடுகிறவன் மதப்பிரஷ்டனாகிறான்.

48. யமமாவது:—அஹிம்ஸை, க்ஷமை, ஸத்தியம், எவ்வகை ஜீவஜந்துவுக்கும் கெடுதிசெய்யாமை, ஈகை, உண்மையான விசுவாசம், உள்ளன்பு, சந்தோஷகுணம், மோடியின்மை அல்லது கர்வமின்மை. சாந்தம் ஆகிய பத்துக் குணங்களடங்கியது.

49. நியமமாவது:—சுசியாயிருத்தல், யாகஞ்செய்தல், தவஞ்செய்தல், தானங்கொடுத்தல், வேதம் ஓதுதல், புலன்களை யடக்குதல், விரதங்கள் செய்தல், ஸ்நானஞ்செய்தல் ஆகிய பத்துக்கர்மங்களடங்கியது.

மணமில்லா மலர்போன்ற குணமில்லா அந்தணர்களே! அத்திரிமகரிஷியின் வசனங்களைக் கவனியுங்கள். கவனித்து உணருங்கள்; உணர உணர மனதுக்கெட்டும். மனதுக்கெட்ட மதிக்கெட்டும். மதிக்கெட்ட வெட்கம் வரும். வெட்கம்வர ரோஷம் வரும். காரியமில்லா ரோஷம் கவைக்குதவாது. அதுபற்றிக் காரியத்தைத் தேடவேண்டிவரும். காரியத்தைத்தேட கால்வேண்டும். முடவனும்பின் காலுக்கேங்கவேண்டும். ஏங்க ஏங்கச்சிரத்தையுண்டாகும். சிரத்தை முற்றப் பக்தியுண்டாகும்.

[illegible]

பக்தியின்கண் பயமுண்டாகும். பயமுண்டாக மனச்சாட்சி தோன்றும். மனச்சாட்சி தோன்ற ஜீவர்களிடத்துத் தயை, விசுவாசம், அன்புமுதலிய நற்குணங்களுதித்துப் பாபபுண்ணியங்களை விளக்கும். குணமுதிக்க மணம்பெறும் (யமம் நிறைவேறிற்று.) இப்பணம் கர்மமென்னும் வாயுவினல் (நியமசாதகத்தால்) கீர்த்தியென்னும் வழியாக வீசப்படும். இக்காற்று மகாத்மாக்களின் குகைவாயிலில் வீச அவர்களுக்குச் சுவாசனையைக்கொடுக்கும். சுவாசனை நன்ருயிழுக்க அவ்வாசனையுள்ள பொருள் சமீபத்திலிருக்கவேண்டும். ஆதலால் அச்சுவாசனையின்பொருட்டு மகாத்மாக்கள் உங்களைநாடி நற்கெதியையடைய வழிகாட்டுவார். கவனியுங்கள்! கவனியுங்கள்!! கவனியுங்கள்!!!

தானும் பிராமணனுக வேண்டுமென்று கோருகின்ற பிராமணேதரர்களே! கேளுங்கள். உங்களுக்குமொரு மொழியுரைப்பேம். பேருக்குமாத்திரம் பிராமணன் ஆகவேண்டுமென்பது உங்களது மனே இஷ்டமா, அல்லது உண்மையான பிராமணனுக வேண்டுமென்பது உங்களது கோரிக்கையா? முதலிற் கூறியதேயாயின் சித்திப்பது அரிது. எனெனின் பிராமணத் தாய் தந்தையருக்குப் பிறந்தால் மாத்திரம் அந்தப்பட்டம் கிடைக்குமேயன்றி மற்றப்படி கிடைக்காது. பிராமணப்பட்டம் வேண்டாம், பிராமணத்துவம் வேண்டுமானல் அதைச் சம்பாதிப்பது உங்களது திறமை. அந்தப் பிராமணத்துவத்திற்குரிய குணதிசயங்களை விவரிக்கக்காண்டீர்களே; அது சுலபமா? அன்று என்பது நிச்சயம். அது அவ்வளவு துர்லபமானதுபற்றியே பிராமணப்பட்டம் பெற்றிருக்கும் உங்களுடைய சகோதரர்களாகிய நாங்களும் நெறிபிறழ்ந்து, திசைதப்பிப் பிராமண இதரர்களாகிய உங்களால் அகௌரவப்படுத்தப்பட்டு, உள்ள மரியாதைகளையுமிழந்து, அந்த வைதிகமார்க்கத்தைவிட்டு லௌகிகப் பிரவர்த்தனராகி ஸூத்திரிக்கையை (பிரேதத்தைத்தொட்டால் ஸ்நானஞ்செய்யவேண்டியிருக்க) ஸர்வதா கையிற்பிடித்து, காதிற்சொருகி, சந்தியாவந்தனுதி நித்திய நைமித்திய கர்மங்களைக் கைவிட்டு, தோலினுற் கட்டப்பட்ட புத்தகங்களைக் கையிற்பிடித்து, காலைமாலையில் அக்கினிஹோத்திராதி அனுஷ்டானங்களுக்குப் பதிலாகக் காபி, டீ இவைகளையும், பிரயாணத்திற்குப் பதிலாக நியூஸ்பேபரையும் வைத்துக்கொண்டு, பூமிக்குப்பாரமாக வயிற்றை வளர்த்துவருகிறேம். ஏன் பிறந்தேன் என்னுந் தத்துவவிசாரத்தால் மதிகலங்காமல் தாயின் இளமைப்பருவத்தைப் போக்கடிக்கப் பிறந்தேன் என்பவனைப்போலவும், ஜீவிக்க உண்கின்றனையா அல்லது உண்ண ஜீவிக்கின்றனையா, என்னும் பிரச்னைக்கு உண்ண ஜீவிக்கின்றேன் என்பவனைப்போலவும், பிறந்து

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

வளர்ந்தும் பயனின்றிப் பரோபகாரமின்றியாதொரு புருஷார்த்தமுமின்றிக் (பரம புருஷார்த்தமின்றி) காமக்குரோதாதிகளுக்கு அடிமைகளாகி, அவைகளின் ஏவுதலை மேற்கொண்டு சகோதரர்களுடன் கலகித்து, மானஸஸரோவரத்தை அழுக்கினல் கலக்கி பதியற்று முன்னேர்களையும் அவர்களுடைய மார்க்கங்களையும் மறந்து அவர்களுடைய கிரந்தங்களுக்கு அர்த்தஞ் சொல்லுவதிற் பண்டிதர்கள் நாமேயென்னும் வீண் கர்வமடைந்து சைவவைஷ்ணவமென்று கலகித்து, ஒற்றுமைகெட்டுப் புறச்சமயிகளுக்கு ஆஸ்பதம் கொடுத்துக் காலங்கழித்துவருகின்றேம். இந்த ஸ்திதியின் காரணத்தைச் சற்று ஊகிப்பீர்களானல் உங்களுக்கு மிகுந்த சாதகத்திற்கிடமாகும். பிராமணத்துவமடைவது எளிதன்று. மனேதிடமுண்டானல் முயற்சி செய்யுங்கள். வெண்ணெயைக் கையில் வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவானேன். பிராமணத்துவத்தையடைய மார்க்கம் உங்களுக்குள்ளேயேயிருக்க, மற்றொருவன் உங்களைப்பிராமணனுக்கவேண்டுமென்று கோருவதேன்! அந்தப்பதவியை யடைவீரானல் அதற்குள்ள மரியாதை அதைவிட்டுப்போகுமோ! நல்லமாடானல் அதற்குத்தகுந்த விலைபெறும் ஆதலால் முயலுங்கள், முயலுங்கள். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்."

திருவையாறு- அ. சுவாமிநாதையர்,
பல்லாரி.

ப்ரம்மவித்தியா

சிதம்பரம்:—விரோதிஞூ மாசிமீ ௫௨ ஸ்திரவாரம்.

விக்கிரகாராதனமும் விஷபேதியும்.

தொடர்ப்பு.

இவ்விதங் கார்த்திகைமாதமொழியப் பின்னர் மார்கழிமாதத்தில் ஒவ்வொரு வீட்டிலும் விடியற்காலம் எழுந்து நீராடிக் கடவுளை வழிபட்டுவருவார்கள். அப்பூசைகளில் தூபமுதலியவைகளும் கற்பூரவாசனைகளும் அதிகப்படும். அந்தகாலத்தில் சூரியகிரணங்களின் குறைவால் சீதம் மிகுதியாயிருக்கும். அக்காலத்தில் அச்சீதம் நிவிர்த்திக்கவேண்டி ஏதேனும் ஒருவழி செய்யாமல் தூங்கி நெருப்புடன் பழகாதொழிவாளுகில் மோசம்வரும். ஆகையால் அக்காலத்திற் சங்கூதிகளைக்கொண்டு குழந்தைகள்முதல்எல்லோரையும் எழுப்பிவிடுவார். எழுந்த பெண்குழந்தைகள் வீட்டை அலங்கரித்து நன்மலர்களை வாயிலில் வைத்தலங்கரிப்பார்கள். காலையில் எழுவதற்கு முன்னரே நல்ல மங்கள வாத்தியங்களைக்கேட்க

[illegible]

[illegible]

விசேடமாய் மனப்பிரீதியைக் கொடுக்கும். அக்காலங்களிற் தேவாலயங்களில் நடக்கும் பூஜாவிஷயங்கள், பெரியமணியோசை முதலியவற்ருற் குறிக்கப்படும். இனி ஒருசமயம் அவ்வீதிகளில் ஏதேனும் ஒருவன் மாண்டால் அங்கு அந்தத் துர்வாடை ஒழியவேண்டி உடனே தழலெடுத்து ஊர்வலஞ்செய்து (வாஸ்துசாந்தி) நல்ல! நீர்களைத் தெளிப்பார்கள். இவ்விதக் கன்மங்கள் இடைவிடாது நடந்தகாலத்தில் நமதுதேசத்தில் விஷபேதியென்னும் இக்கொடிய ரோகம் இல்லாதிருந்தது. இவ்வாரியாசாரங்களின் இயலறியாதார் அவைகளைக் கைவிட்டுத்திரியநேர்ந்த இக்காலத்தில் இவ்விரோகம் எங்கும் பரவிவரக்காண்கிறோம். ஓ ஆரியசகோதரர்காள்! இனியேனும் இவ்வித நல்வழிகளைத் துறக்காது காத்து நல்வழியில்நின்று துன்பங்களை அகற்றுங்கள்; ஆசாரங்களை விடாதீர்கள்; நமது வம்சத்தைக் காருங்கள்; விக்கிரகாராதனையை ஒழிக்காதீர்கள்; உங்களுக்கிம்மை மறுமை இருமையுங் கைகூடும்; எமது ஆரியாசாரம் அர்ச்சா பூசை இரண்டுந்தவிர வேறு நல்வழியில்லை. இனி உங்களுக்கு அவ்வாசாரத்தில் நன்னம்பிக்கையருளக் கடவுளைப்பிரார்த்திப்போம்.

மற்றது மற்ருேரிடம் வரும்.

கன்மம்.

தொடர்பு.

ஐயா!

பிறகு எழுந்த கேள்வி "கன்மங்களால் ஜீவர்களை வீணில் நிர்ப்பந்திப்பதில் பயன் யாது?" என்பது. இதன் கருத்து இது:—இக்கன்மம் அநாதிதொடங்கியுள்ள கடவுளின் ஆணையும் ஆகுமேல் அதையனுட்டிக்கத் தவறின், கடவுளது மகாகோபம் எம்மிடம் வருமென்பது முண்மையாமாகில் இவ்விதக் கடுமையான வழியை ஆன்மாக்களுக்குகருளிய கடவுள் வன்கண்மை உள்ளவரோ? இல்லையேல் அவர் ஏன் வேறு ஒரு சுலபவழி ஏற்படுத்தக்கூடாது. அதனுற்ருன் என் அநாதியாகிய அவித்தையை விலக்கிப் பேராநந்தம் பெருகக்கூடாது என்பது. இதற்கு விடை:—ஐயா! இக்கேள்வியில் முன் "கன்மத்தைத் தவிர்த்து மற்றேதும் கடவுளின் அன்பைப்பயக்காதோ" என வினவிய வினுவுக்கு விடைபகர்ந்தவிடத்திற்ருனே பெரும்பான்மை விடையளிக்கப்பட்டது. ஆயினும், இதிற்சிறிது மிகுந்ததாகுமேல் அதை இங்கு எடுப்பாம். கடவுள் எம்மைக் கன்மத்தாற் கட்டினர் என்பது வீண்பிடிவாதமும் அறியாமையுமே. யாம் தாமே கன்மவலையிற்சிக்கினோம்; அவர் கருணைக்கடலானமையால் அதினின்று மீண்டுவர வழிகளைக் காட்டிநிற்கின்ருர். எல

[illegible]

மிடம் அநாதிகாலந் தொடங்கிக் கன்மம் என்னும் மலம் தொடர்ந்துநிற்பதால் அதை விலக்கக்கருதின கருணைக்கடல் "உஷ்ணம் உஷ்ணத்தால் ஒழியும்" என்பதுபோல கன்மத்தை அதை விலக்குங் கருவியாக நியமித்தார். அஃதெங்ஙனமெனில், உலகத்தில் செம்பினியற்கையிற் சேர்ந்த களிம்பை அடிக்கடி ஒழிக்கவேண்டி எலுமிச்சம் பழச்சாற்றில் தோய்ப்பதுபோல் என்றறிக. அந்த செம்பினிட்ட ஓர்வகைப் பச்சிலைச்சாறு அதில் அநாதியினுடனிகழ்ந்த களிம்பை ஒழித்து அதன் தன்னுருவை விளக்கிப் பொன்னுக்குவதுபோல், சிற்சில கர்மங்களால் ஆன்மாவினிடம் மறுபிறப்புக்கு ஏதுவான வாசனை ஒழியக் கேவலான்மாவாக மிகுந்த ஜீவன் கடவுளினது பேராற்றலில் அடங்குவான். ஆதலின் இங்குண்மையறிந்த பெரியோர் கன்மம் என்பது துன்பத்திற்கிடமெனக்கருதார்; அஃதின்பத்திற்கே இடமெனக்கொள்வார். செம்புக்குள் அநாதியிற் களிம்பமைந்ததுபோல ஆன்மாக்களுள் அநாதியில் கன்மம் அமைந்தது. அஃது மலத்தாற்ருன் ஒழியுமன்றி மற்றதனுலொழியாது. அதற்கெனக் கன்மத்தைக் கைவிடலாகாது என்பதுண்மை.

இனிக் கடைபிற்ருேன்றும் விடை இது:—"அஃதனுதி வத்துவோ!" என்பது. இதனுட்கருத்திது:—அஃதனுதி வத்துவாயின் ஏன் நசித்தல்வேண்டும். நாசமுண்டெனில் அஃது அநாதிவத்துவாதல் கூடாது. அஃது அநாதியென்பதும் பிரமஞானத்தால் ஒழியுமென்பதும் எவ்விதம் ஒவ்வுமென்பது. இதற்கும் விடை முன்னரே சொன்ருேம். அங்கு விதையும் முளையும் திருட்டாந்தமாக்கினோம். அங்கு காட்டியவழி அது முற்றிலும் ஒழிவதில்லை என்ருேம். அம்மலம் ஓரிடமிருந்து விலகினும் மற்ருேரிடம் நிலைபெற்றே நிற்கும். தாமிரத்தினகணமைந்த களிம்பை ஒருவாறு போக்கினும் அது அதை விட்டகன்று மற்ருேரிடம் நிற்குமென்பதை யறியாதவர் யாவர். உள்ளதுபோகாது" ஆதலின் அவ்வத்து முற்றிலும் அழிவதில்லை. அந்நிலைமையில் அதற்கு மற்றதைக் கட்டுவதால் உண்டான காரணப்பெயரான 'பாசம்' என்னும் பெயருர், ஆன்மரூபத்தை மறைத்ததால் ஏற்பட்ட காரணப்பெயரான 'மலம்' என்னும் பெயரும் இல்லை. அம்மலம் விட்டொழிந்தவிடம் ஆன்மாவும், பாசத்தாற் கட்டுண்டமைபற்றிப் பெற்ற 'பசு' என்னும் நாமத்தையும், இன்பதுன்பங்களை அறியுந்தன்மைபற்றி அமைந்த ஜீவன் என்னும் நாமத்தையும் பெற்றிலது. ஆயின் அது அநாதியும் வஸ்துவுமே. இவ்விடத்து உண்மை இது:—இக்கன்மமென்பது உலகப்பொருளாதலால் இது உள்பொருளென்ருவது இல்பொருளென்ருவது துணியப்படா நிலைமையிலுள்ளது. எங்ஙனமெனில், மலத்திற்கு ஒரு ரூபத்தை மறைத்தலன்றி வேறு சுரூபவிலக்கணமில்லை. அங்ஙன

[illegible]

ஞ்செய்யாது அது இருக்கவேண்டும் எனில் அங்கிலே அறியப்படாதிலேயென்பது சொல்லவும் வேண்டுமோ? அது அநாதிநசித்தலும் அங்கமையாது. ஆயின் அஃதுண்மைப்பொருளென்றுவது இன்மைப்பொருள் என்றுவது துணிதல் ஒருவிதமுமொவ்வாது. ஆதலாற்றன் இது அநிர்வசனீயம் என்பது. அங்ஙனஞ்சில சைவர் மதத்தில் பதியை நோக்கி, பசு பாசம் இவை அசத்தாம். பசு பாசங்களை நோக்கப் பதி சத்தாகவேயிருப்பான். பசு என்பது பதியை நோக்க வசத்தும் பரசத்தை நோக்கச் சத்துமாய்முடியும். பாசம் என்பது பதியை நோக்க வசத்தும் பசுவை நோக்கச் சத்துமாய் முடியும். ஆயின் பதி பசுக்களை நோக்கப் பாசம் அசத்தென முடியும் என்பர். மற்றுஞ்சிலர் பசுவும் பாசமும் பதியைநோக்கி அசத்தாவதுபோல பதி பசுக்களை நோக்கப் பாசம் அசத்தென்பர். ஆதலின், பாசம் அநிர்வசனீயம் என்ற ஆன்றோர் துணிபு மிக வியக்கத்தக்கதே. அஃது "ஆணவம், கான்மணம், மாயேயம்" என மூன்றுவிதம். அவற்றுள் "ஆணவமென்பது ஆன்மாக்களுள் உடனிகழ்ந்து அநாதியிற் பற்றியது. அதை ஒழிக்காதவரையில் அது ஒருசமயமும் ஆன்மாவுக்குப் பேரானந்தமளிக்காது. 'கான்மணம்' என்பது மனம் சரீரம் இவற்றை அபேக்ஷித்து ஜீவனுக்குண்டாகும் இன்பதுன்பங்களைப் பயப்பிக்கும் பண்பாய் நின்றது. 'மாயேயம்' என்பது பிரமலோகம் வரையில் தனுகரணநிருபமாய் உள்ளது. அவற்றுள் முதல் இரண்டு இவற்றையேஇங்கு 'கன்ம'மென்றேம். அவற்றுள்ளும் முதற்காரணம் இரண்டாவது காரியம்; அங்கு காரியமான கன்மம் 'அகன்மம், விகன்மம், கன்மம்' என மூவகைப்படும். இனி எதை அனுட்டிப்பதால் புண்ணிம் பாவம் இரண்டுமுண்டாகாது. (உதாரணமாக விக்கல், சிரித்தல், விளித்தல் முதலியன) அது 'அகன்மம்' அனுட்டிப்பதால் பாவம் பெருகுவது. 'விகன்மம்' (உதாரணமாக திருடுதல், பிறர் மாதனை இச்சித்தல், கட்குடித்தல் முதலியன) மேலும், தத்தம் வருணுசாரங்களையுங் கடந்துநிற்றலும், அவைகளை மாற்றுதலும் இதிற்றுன்சேர்க்கவேண்டியன். இதன் பயன் "நாகயாதனை" ஓயாப்பெருஞ் சம்சாரம். மூன்றுவது கன்மம் என்பது மூவகைப்பட்டது. நித்தியம், நைமித்திகம், காமியம். இவற்றுள் 'நித்திய'மென்பது விட்டால் பாவத்தைவிளைவிக்கும்; செய்தால், விட்டால் உண்டாகும் பாவத்தை ஒழிக்குமேயன்றி வேறில்லை. 'நைமித்திகம்' நிமித்தங் கண்டவிடம் செய்வதால் பயன்தரும்; செய்யாவிடிற் குற்றமாம். 'காமியம்' என்பது செய்யின் நற்பயனையளிக்கும்; செய்யாவிடிற் குற்றம் பயக்காது. இவைகட்கு முறையெ உதாரணங்கள்: 'சந்தி' (காலைக்கடன்) இது செய்யாது ஒழித்தால் பிராமணத்துவங்கெடும்; செய்தால் அதைத்தடுக்கலாம்.

[illegible]

'அமாதர்ப்பணம்' இஃது அமாவாசையன்று செய்தால் பிதுருதேவதா திருப்தியைப்பெறுவான்; விட்டால் அவன் சர்மமாகிய பாவமடைவான். 'காமியம்' சாந்திராயணமுதலிய விரதங்கள். இவைகளைச் செய்பவன் குணமடைவான்; செய்யாதவன் குற்றமடையான். ஆயின் இம்மூவகைக் கன்மங்களும் ஆவசியகம் அனுட்டிக்கவேண்டும். அவற்றை விட்டால் எமது சரீரம் மனம் இவை சுத்திபெறவேண்டி வேறு வழியில்லையென்றேம். ஆயின் கன்மம் இன்றியமையாது. இவ்விதம் முதல்வருஷம் மூன்றும் பத்திரிகை தொடங்கி முறையே புத்தியைப்பற்றி ஓர் உபந்யாசமும், பிறகு "ஆன்மாவும் சரீரமும்" என்னும் மகுடத்தின்கீழ் சரீரான்மாக்களின் இயற்கையும் வேற்றுமையும் 'மறுபிறப்பு' என்னுந் தலையின் கீழ் அவ்வான்மாக்களுக்கு மறுபிறப்புண்டென்பதும், 'கடவுள்' என மகுடஞ்சூட்டி நம்மையாளும நாதனதுண்மையும், பிறகு கன்மத்தையும் எடுத்து விரித்துவந்தேம். இதுகடுவில் மூன்றனா வருடங்கள் சென்றனவாயினும், இதுகாறும் இவ்விஷயங்களை எழுத யாதுந்தடையின்றித் தேகாரோக்கியத்தையும் புத்தியையுங் கொடுத்தருளின கடவுளது தாளிணைகளைத் தளராது சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறேம். இனி "மறுமை" "ஆரியாசாரரகசியம்" இவற்றைப்பற்றி எழுதவும் புகுவோம். ஆதலின் அவ்விஷயத்தில் எல்லோரும் நல்லாசிகூறிவாழ்த்துவரென எதிர்பார்க்கிறேம்.

கன்மம் முற்றிற்று.

சரசுவதி.

ஐயா!

இப்பெயர்கொண்ட ஓர் பத்திரிகை பல்லாரியினின்று வெளியாகின்றது. இதில் அங்கு நடந்துவந்து விஜயத்துவஜமும் அடங்கியது. அதில் வித்தியாவிஷயம் நீதிகள், அரசாங்கவிஷயம், மற்றும ஆரியாசாரங்கள் நன்மதங்கள் இவைகளைப்பற்றியும எழுதப்படுகிறது. இப்பத்திரிகை வைகிருதமென்னுந் தெலுங்குபாஷையில் வழங்கிவருகிறது. இதற்கிணை ஆங்கிலேய பாஷையில் ஒன்றிருப்பதாயுந் தெரியவருகிறது. இப்பத்திரிகை தெலுங்குதேசம் முற்றிலுஞ் சுழன்று அத்தேசத்தவர் யாவருக்கும் பெரிய உபகாரத்தைச் செய்விக்குமென்பதிற் சிறிதுந் தடையில்லை. இதுவரையில் "ஆந்திரப்பிரகாசிகை" முதலிய பல பத்திரிகைகள் வெளியாகிவருகின்றன. ஆந்திரபாஷா சஞ்சீவினி முதலிய சில பத்திரிகைகள் ஒழிந்தன. அவைகள் உலகோபகாரத்தைக்கருதியே வெளியாகின்றனவென்பது திண்ணம். இனித் தெலுங்குப்பத்திரிகையென்பதனுல் "ஹிந்துஜனஸம்ஸ்காரிணி" என்பதாதிகளைப்போல் நமது முன்னோர்கொண்ட நன்னெறியைப்

[illegible]

பலவாறு தூற்றி நின்றால் இதனாற் பயன் யாதிருக்கும்? இது விசேஷமாய் நல்வழியில் நடத்துவதால் இதை எவ் விஷயத்திலும் விருத்தியடையும்படி கடவுள் அருள்புரிவாரென்று அவரது திருவருளைச் சிந்திக்கின்றோம்.

ஆரியசித்தாந்த சந்திரிகை.

இப்பத்திரிகை மலையாள லிபியில் சம்ஸ்கிருதம் மலையாளம் இரண்டு பாஷைகளிலும் வெளியாகிவருகிறது. இப்பத்திரிகை எத்தேசத்தாராயினும் ஆரியர் எல்லோருக்கும் உபயோகமாவதில்லை. ஆயினும் நமது "ப்ரம்மவித்தை" தமிழ்நாட்டினர்க் குபயோகமாவது போலும், 'சரஸ்வதி' பத்திரிகை தெலுங்கர்க்குபயோகமாவதுபோலும், மலையாளநாட்டுத்தவர்க்குபயோகமாவதிற் றடையில்லை. என்னையெனின், உலகத்தில் நம் தேயத்துள்ள ஜனங்கள் எல்லோரும் வடமொழியிற் பயிற்சிபெற்றாரில்லை. ஆதலின் அவர்கள் வடமொழியிலுள்ள கீதை முதலிய நன்னூல்களையும் அதன் கருத்துகளையும் அறியார். அவர்களுக்கு இதுபோன்ற பத்திரிகைகள் செய்யும் உபகாரம் அளவுகடந்ததென்பது சொல்லவும் வேண்டுமோ! இந்நங்கையின் சேர்க்கையால் நமது 'ப்ரம்மவித்தையை' விசேஷ மகிழ்ச்சியுறுவாள். அவள் கூறுமாசியாதெனில், இப்பத்திரிகை தான் பெருகுவதுமன்றித் தமது தேசத்தவர்க்கு நல்லறிவைப் பெருக்கவேண்டுமென்றே. நமது தோழி நீடூழி வாழவேண்டுமென்பதும் அவளது விருப்பம். இனி அப்பத்திராதிபரைக் கேட்டுக்கொள்வதொன்றுண்டு. இனி இப்பத்திரிகையில் விஞ்ஞான சிந்தாமணியைப்போல் சம்ஸ்கிருதபாகம் கிரந்த எழுத்தில் அச்சிடப்பட்டால் அது கீழ்தேசத்திற் சோளதேசத்திலும் பாண்டியதேசத்திலும் சேரதேசத்திலும் வழங்கப்பெறும். இனிக்கேரளதேசத்தில் மலையாள லிபியைக்கற்றவர் பெரும்பான்மையில் கிரந்தலிபியை அறிந்தேயிருப்பார். ஆதலின் அங்ஙனஞ்செயல் அவர்க்கு விரோதமன்று. நம் தேயத்தவர்களோ மலையாளலிபியை முகர்ந்தும் அறியார். இனிப்பத்திரிகாசாரியர் அதை முன்னுக்குக்கொண்டுவரக் கங்கணம்பூண்டாராயின் அவ்விஷயத்தில் தக்க முயற்சியெடுப்பாராயினும் எமக்கு எமது 'ப்ரம்மவித்தை' யைப்போன்ற பத்திரிகைகள் எல்லாம் பெருகவேண்டு மென்பது கருத்து. எமது பத்திரிகை ஒன்றாய்த் திரிவதிலும் மற்றதுடன் கூடியுலாவுவது எவ்வளவு நன்மை. இப்பத்திரிகையைத் தொடக்கும்பொழுதே எமது கருத்து எவ்விதத்திலும் நமது நாட்டிற் பற்பல பத்திரிகைகள் ஓங்கி நமது வடமொழி தழைக்குமென்பதே. தன் தேசத்திலும் நன்மதங்களிலும் விசுவாசம்பெற்ற வத்தேசத்தவர் இதை எவ்விதத்திலும் முன்னுக்குக்கொண்டுவரும்படி முயல்வார்களென்று அவரை மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

[illegible]

அறிவிப்பு.

கையொப்பக்கனவான்களே !

நமது ப்ரம்மவித்தியா பத்திரிகைக்கு 4-வது ஆண்டு துவக்கி ஆறுமாதங்கட்குமேல் சென்றமையால், பதினைந்து தினங்கட்குமுன் அவரவர்களால் சேரவேண்டிய பாக்கித் தொகைகளையும் நடக்கும் வருடத்திற்குப் பணமுமனுப்புமாறு கார்டுகளனுப்பியும், பத்திரிகைவாயிலாகப் பன்முறை அறிவித்தும், பழைய பாக்கிகளையேனு மனுப்பாது மனச்சாக்ஷிக்கு விரோதமாகச் செய்துவருவது தர்மமா? தபாலாபீசு குறுண்டணங் கட்டினலன்றிப் பத்திரிகை அங்கீகரிக்கப்படமாட்டாதே. இதையெல்லாம் அறிந்திருந்தும் மௌனமாயிருக்தல் எமக்குப்பெருநஷ்டம். யாம இவ்விஷயத்தைப்பற்றிப் பன்னிப்பன்னி எழுதுவது இனி உசிதமாகாது. ஆகையால் அன்புள்ள கனவான்களே தயைகூர்ந்து இனி ஆலஸ்யஞ் செய்யாது பாக்கிகளையு நடக்கும் வருடத்திற்கு முன்பணமும் அனுப்பிஆதரித்துவரக் கோருகிறேன். கு. ஸ்ரீநிவாசசாஸ்திரி.

சிவரஹஸ்யப்பதிப்புவிளம்பரம்.

இதனால் சகலருக்குமறிவிப்பது யாதெனில், கும்பகோணம் கஸ்பா கீழப்பயன்தெரு பத்தாம்நம்பர்வீட்டில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீவித்தியா அச்சுக்கூடத்தில் இதனடியில் கையொப்பம் வைத்திருக்கிற நானும் ஷெ அச்சாபீஸ் மானேஜர் பட்டஸ்ரீ பாலஸரஸ்வதீ ஸ்ரீமாந் நாராயணசாஸ்திரிகளும சேர்ந்து, சிவபிரானது திவ்யமகிமைகளையும் வில்வதளம், விபூதி, ருத்திராக்ஷம், சிவபூஜை, பாணலிங்கபூஜை, சிவதியானம் முதலியவற்றின் வைபவங்களையும் விரித்துரைக்கின்ற "சிவரகஸ்யம்" என்னும் பெயர்பூண்ட திவ்விய இதிகாஸ விரத்தினத்தை, முதலிலிருந்து பன்னிரண்டம்சங்கள் வரையிலும், (ஒருக்கால் கொடுப்பவர்களிருந்து கொடுக்குப் பக்ஷத்தில் மற்ற அம்சங்களையும் கூட) கிரந்தஎழுத்தில் அச்சில் பதிப்பித்தால் நன்மையத்துள்ள அரண்டியார் உளமகிழச்சாலவுமிடமுண்டாமென நினைத்து, அதனைக் கூடிய சிக்கிரத்தில் நிறைவேற்ற ஒருமுயற்சி யெடுத்துக்கொண்டிருக்கின்றனம். முதல் பன்னிரண்டம்சங்கள்வரையிலச்சிட சுமார் (௫௲) ஐயாயிரம்ரூபாய்க்குக்குறைவின்றி செல்லுமாகையால் அந்தத்தொகைக்கு, அரியநமதாரியசிவபக்தர்களையே கையொப்பக்காரர்களாகச்சேர்த்து அவர்களிடமிருந்து அனுப்பப்படும் முன்பணமாகிய ரூபாய் ௫-க்கும் அவர்களுக்கோர் ரசிதுகொடுத்து பெற்ற அப்பணத்தைக்கொண்டே துடர்ந்ததைநிறைவேற்றக்கோருகின்றோம். கையொப்பக்காரர்கள் லேபிலாயனுப்பாமலே மணியார்டர்மூலமாவது ரொக்கமாயாவது அனுப்பி ரசிதுபெற்றுக்கொள்ளவேண்டியது. வருகிற விக்ருதி௵ சித்திரைமீ க-உ தொட்டு புத்தகம் முடியும்வரையில் மாதம் க-க்கு சுமார் சும பக்கங்களுக்குக் குறையாமல் ஒவ்வொருசஞ்சிகை அவரவர்களுக்கு அனுப்பப்படும்.

எம். வி. ஸாம்பமஹேஸ்வரய்யர்.

மட்டையாந்தடல்

பட்டஸ்ரீ பாலஸரஸ்வதி

நாராயணசாஸ்திரிகள்.

ப்ரஹ்மவித்யாமுத்ராக்ஷரஶாலாயாம் விக்ரேயாணி புஸ்தகாநி.

வேதஶீர்ஷவாஸுதேவம்	0	௧௨	0
ஶ்ருதிஸூக்திரத்நகாஶிகா வ்யாக்யா	0	௧	0
ஶ்ரீ[illegible]ஷ்டகம்.	0	௧	0
ஶிவதத்வவிவேகஸஹித ஶிவகர்ணாம்ருதம்.	௨	0	0
ப்ரஹ்மதர்கஸ்தவ – லகுவிவரணம்.	0	௮	0
[illegible] – தத்வ்யாக்யா.	0	௪	0
ஶிவ[illegible] ஸ்துதி வ்யாக்யா	0	௭	0
ஶிவத்யாநபத்ததி:	0	௧	0
நாராயணாத்வய[illegible] ஸவ்யாக்ய:	0	௨	0
[illegible] ஸவ்யாக்ய:	0	௨	0
[illegible]	௧	0	0
[illegible] ஸவ்யாக்யா.	0	௨	0
[illegible] ஸ்துதி வ்யாக்யா.	0	௧	0
[illegible]	0	௧	0
[illegible]	0	0	௬
ஶிவகர்ணாம்ருதம்	0	௪	0
[illegible]	0	0	௬
[illegible]	0	0	௬
[illegible]	0	௮	0
[illegible] வ்யாக்யா	0	௧	0
[illegible]	0	௫	0
[illegible]	0	௬	0
[illegible]	0	௬	0
[illegible]	0	௧	0
ஶிவராத்ரிநிர்ணய:	0	௨	0
[illegible]	0	௧	௬
[illegible] விஜய:.	0	௩	0
[illegible]	0	0	௬
[illegible]	0	௧	0
[illegible]	0	௧	0
[illegible]	0	௨	0
[illegible]	0	௬	0
[illegible] விஜய:?	0	௬	0
[illegible]	0	௧௦	0
[illegible] விஜய:	0	௮	0
[illegible]	0	௫	0
மறுபிறப்பு.	0	0	6
நீதிக்கீர்த்தனை.	0	1	6
ஆசௌசவிதி.	0	2	0
ஆன்மாவும் சரீரமும்.	0	0	6
ஆனந்தநடராஜர்பேரில்பாடியசிவசங்கர தீக்ஷிதர் கீர்த்தனம்.	0	0	6

Chidambaram:—Printed and Published for the Proprietor at the Brahmavidya Press, No 76. Senkalooneer Pilliar koil Street.

ப்ரஹ்மவித்யா

பத்திரிகாமூல்யம்.			
1-வருஷ	2	12	0
6-மீ	1	8	0
3-மீ	0	14	0
1-காபி	0	2	6
இலங்கைக்கு	3	8	0

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

BRAHMAVIDYAPATHRIKA.

பத்திரிகைப் பணியார்டராயவரைத் ... ரூபா 1-க்கு அணா 1-சேர்த்துத் தபால்லேபிளாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியா ப்ரெஸ் மானேஜருக்கு அனுப்பவேண்டும்.

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

[illegible]॥ [illegible]॥

ச-புத்தகம்] சிதம்பரம்:— க௮௯௦௵ மார்ச்சுமீ ௧௨ [இலக்கம் ௰௫

வக்தவ்யம்

க- [illegible]

உ- [illegible]

௩- [illegible]

ச- [illegible]

௫- [illegible]

சா- [illegible]

எ- [illegible]

இதி-

[illegible] நாராயணார்ய:

[illegible]

பத்திரிகாவிதானங்கள்

க. பத்திரிகை வேண்டுவோர் ப்ரம்மவித்தியாப்ரெஸ் மானேஜருக்கு முன்பணமாகவே யனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

உ. கடிதமுதலியவைகளும் மேற்படிமானேஜருக்கே அனுப்புதல்வேண்டும்.

௩. பத்திரிகையிற் பிரசுரிக்கும்பொருட்டு அனுப்பப்படும் கடிதங்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில் நல்லமை கொண்டு சுத்தமாயாகவும், பொதுவிருத்திக்கேற்றதாகவும் எழுதப்படல்வேண்டும். தூஷணையடங்கிய கடிதங்கள் இடம்பெறா.

ச. கையொப்பக்காரர்கள் ஊர் பெயர் முதலியவற்றை நன்றாகஎழுதியனுப்புதல்வேண்டும். வேறுஊர்களுக்குப் போகநேரிடின் அவ்விலாசத்தை அறிவித்தல்வேண்டும்.

௫. இன்னும் இதைப்பற்றிவிவரம் அறியவேண்டுவோர் அரையணா லேபிலாவது ரிப்பிளை கார்டாவது அனுப்பித்தெரிந்துகொள்ளலாம்.

சா. அனுப்பப்பட்ட கடிதங்கள் எவ்வித அசௌகரியத்தினலாவது பிரசுரிக்கப்படாவிடில் திருப்பவும் வாப்சு செய்யப்படா.

எ. முன்பணம் அனுப்பாதவர்களுக்கு இனிப் பத்திரிகை யனுப்பப்படமாட்டாது.

ரா. நாராயணசாமி ஐயர்,
மானேஜர்,
ப்ரம்மவித்தியா ப்ரெஸ்,
சிதம்பரம்.